**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 9 February 2018

# அனைத்துலக சட்டம் உருப்பெற சிங்கப்பூர் துடிப்புடன் உதவ வேண்டும்

அனைத்துலக சட்டத்திற்கு உருவம் கொடுக்க சிங்கப்பூர் துடிப்புடன் உதவ வேண்டும் என்று நிதி, சட்ட மூத்த துணை அமைச்சர் இந்திராணி ராஜா தெரிவித்து இருக்கிறார்.

நாடுகள் தங்களுடைய எல்லைகளுக்குள் எவற்றை எல்லாம் செய்யமுடியும், எவற்றை எல்லாம் செய்ய முடியாது என்பவற்றை அனைத்துலக நியதிகள் தீர்மானிக்கும் போக்கு அதிகமாகி வருகிறது என்பதை அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

ஆகையால் அத்தகைய அனைத்துலக நியதிகள் சிங்கப்பூர் சமூகத்திலும் அதன் பொருளியலிலும் ஆழ்ந்த தாக்கத்தைக் கொண்டிருக்கும் என்றார் அவர்.

சிங்கப்பூரின் உள்நாட்டு பொருளியலிலும் சமூக வாழ்விலும் அனைத்துலக சட்டம் ஏற்படுத்தக் கூடிய விளைவு தொடர்ந்து அதிகமாகி வரும் என்றும் அமைச்சர் விளக்கினார்.

அனைத்துலக சட்ட ஆண்டு மறுபரிசீலனை மாநாட்டில் கலந்து கொண்ட 200 வழக்கறிஞர்கள், அரசத்தந்திரிகள், அதிகாரிகளிடையே குமாரி இந்திராணி ராஜா உரையாற்றினார்.

இந்த மாநாட்டிற்கு சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் அனைத்துலக சட்ட நிலையம் ஏற்பாடு செய்தது.

எல்லை கடந்த சட்ட சச்சரவுகள், அதிகமான வெளிநாட்டு மற்றும் அனைத்துலக சட்ட விவகாரங்களை உள்நாட்டு நீதி மன்றங்கள் கையாளுவது ஆகியவை உள்ளிட்ட போக்குகளை இந்த மாநாட்டில் சட்டத்துறையினர் விவாதித்தனர்.

அனைத்துலக சட்டத்திற்கு உருவம் கொடுக்க சிங்கப்பூர் வழக்கறிஞர்கள் தீவிரமாக உதவி செய்ய வேண்டியது ஏன் என்பதை அமைச்சர் குறிப்பிட்டார்.

நாடுகள் தங்களின் எல்லைக்கு உட்பட்டு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதன் தொடர்பில் அனைத்துலக சட்டம் ஏற்படுத்தக் கூடிய தாக்கத்தைப் பற்றி அவர் விளக்கினார்.

எடுத்துக்காட்டாக, ஒரு நாடு பொருள், சேவைக்கு விதிக்கக் கூடிய தீர்வைகளை அல்லது ஒழுங்குமுறை வரம்புகளை அனுமதிப்பதா தடை செய்வதா என்பதை அனைத்துலக சட்டம் முடிவு செய்கிறது.

இத்தகைய சட்டங்கள் தேசிய மேம்பாடு, உள்நாட்டு புத்தாக்கம், வாழ்வாதாரம், மக்களுக்கு தாக்குப் பிடிக்கக்கூடிய வகையில் மருத்துவ வசதி கிடைப்பது போன்ற பல துறைகளிலும் விளைவுகளை ஏற்படுத்துவதாக குமாரி இந்திராணி விளக்கமளித்தார்.

அனைத்துலக சிவில் சட்டத்தைப் பொறுத்தவரையில் நாடுகள் மிகவும் அணுக்கமாக எப்படி ஒத்துழைக்கின்றன என்பது மற்றொரு போக்கு என்று தமது உரையில் அமைச்சர் விவரித்தார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.